Registered No. M-4433. Madras War Review (TAMIL) 25-8-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஆகஸ்டுமீ 25உ, வெள்ளிக்கிழமை இதழ் 51

ஜெனரல் அய்சினோவர்.

துளைத்துக் கொண்டிருங்கள்

☆

பிரான்சில் நேச நாட்டினர் மகத்தானதோர் வெற்றி பெற்றார்கள். இதனால், எதிரி கிறு கிறுத்துப் போயிருக்கிறான். ஆகவே, அவனைத் துளைத்துக்கொண் டிருப்பதற்கு இதுவே ஏற்ற தருணம்.

நமக்கு விதிக்கப் பட்டிருக்கும் விசேஷ வேலைகளை நிறை வேற்றுவதில் நாம் மன உறுதியோடு வேலை செய்து கொண்டிருக்கிறோம். இதைக் கொண்டு, இந்த யுத்த சரித்திரத்திலேயே மிகச் சிறந்த தோர் வாரமாக இதை ஆக்கலாம். இந்த வாரம் நமக்கு மகா உன்னதமான பலன் தரும் வாரமாகும். நாஜிக் கொடுங் கோலர்களின் ஆசையில் மண் விழும் வாரமாகும்.

ஜெனரல் அய்சினோவர், தன் படையினருக்கு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி விடுத்த செய்தி.

பொருளடக்கம்.

	பக்கம்.
துளைத்துக் கொண்டிருங்கள்	1
முரசொலி	2
தலையங்கம் : நமது கடைசி வாக்குறுதி	3
உப தலையங்கம் : பிரான்சு நீடூழி வாழ்க	4
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	5
சுரு மீன வேட்டை	6
மிலிடேரி சொக்கன்	7
சென்னை வீரர்களுக்குப் படைத்தலைவர் பாராட்டு	8
காரியத்தை முடிக்கிறார்கள்	9
வானொலி நாட் குறிப்புக்கள்	11
யுத்த நாட் குறிப்புக்கள்	12

முரசொலி

"உலக யுத்தம் மகத்தான தோர் பெரும் போராட்டமாகப் பெருகி விட்டது. உலக சரித்திரத்திலேயே இவ்வளவு மகத்தான தோர் போராட்டத்தை மனிதன் கண்டதில்லை. ஒரு போது மில்லாத அளவிற்கு தம் சாம்ராஜ்யத்திற்கே பெருங் கஷ்டங்கள் உண்டாகிவிட்டன......நமது தாய் நாட்டைக் கூட எதிரி தாக்க ஒட்டாதபடி காப்பாற்றிக் கொள்ள முடியாத தோர் நிலைமை ஏற்பட்டு விட்டது."

—ஜெனரல் குனிஸ்கி காய்சோ,
ஜப்பானிய முதன் மந்திரி கூறியது.

* * * * *

"ஜப்பானியரின் வாழ்விற்கே பாதுகாப்பளிக்கக் கூடியது ஜப்பானியக் கப்பற் படைதான். ஜப்பானை யடுத்துள்ள கடலில் தான் அது போராடும். ஏனென்றால் ஜப்பானுக்கு உருவான கப்பற் படை ஒன்று தான் உண்டு. இந்தக் கப்பற் படை யழிந்து விடுமானால், அதன் போக்கு வரவுப் பாதைகள் துண்டிக்கப்படும். அப்போது எதிரிகள் ஜப்பானை எளிதில தாக்கக் கூடும்."

—டோக்கியோ வானொலி நிலையம், ஆகஸ்டு 2-ம் தேதி கூறியது.

* * * * *

"நமது படைகள் 10 லட்சத்திற்கு மேலாகவே பசிபிக் போர் முனையிலிருக்கின்றன. ஹாவாய் தீவு முன்போல ஒரு சாதாரணமான இடமாயில்லை. குடால்கனல், நீயுகினி, மார்ஷல் தீவுகள், மாரியனா தீவுகள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதற்கு ஹாவாய் தீவு பெரிதும் உதவியா யிருந்தது. சீனாவில் போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு இத்தீவுகள் பெரிதும் உதவியாயிருக்கும். அதைக் கொண்டு பிலிப்பைன் தீவுகளைத் திரும்பக் கைப்பற்றி சுயேச்சை யளிக்கலாம். ஜப்பானையும் அதன் தலை நகரமான டோக்கியோவையும் தாக்கலாம்."

—ஜனாதிபதி ரூஸ்வெல்ட், ஆகஸ்டு 12 ம் தேதி
ஒலி பெருக்கிய பிரசங்கத்தில் குறிப்பிட்டது.

* * * * *

"பர்மாவில் நாசமடைந்ததைப் போல, வேறெங்கும் ஜப்பானியர் அவ்வளவு நாசமடைந்தார்கள் என்று நான் கருதவில்லை. ஒரு ஆங்கிலேயரும் அவருடைய மனைவியாரும் என்னைக் காணும் பொருட்டு லண்டனுக்கு வந்தார்கள். தம் மகன் பர்மா போர் போர்முனை யிலிருந்து தமக்கு எழுதியிருந்த தோர் கடிதத்தையும் உடன் கொண்டு வந்திருந்தனர். அதில், ஒரு ஜப்பானிய சிப்பாய்ப் பிணத்தை யறுத்துச் சோதித்ததில், அவன் வயிற்றில் தவளையையும் காட்டுத் தட்டையையுந் தவிர வேறொன்றும் காணப்படவில்லை யென்று எழுதியிருந்தது. இதினின்று ஜப்பானியப் படைகளுக்கு எவ்வளவு பெரும் சேதம் நேர்ந்திருக்கிற தென்று விளங்குகிறது."

—சர் பெரோஸ்கான் நூன், டில்லியில்
ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ௵ ஆகஸ்ட்டு ௴ 25௳, வெள்ளிக்கிழமை | இதழ் 51

நமது கடைசி வாக்குறுதி

ஜெர்மனி சம்பந்தப்பட்ட வரை எல்லாம் செம்மையாகவேயிருக்கின்றன; ஜெர்மானியரின் மகா போர்த் தந்திரத் திட்டப்படியே தான், ஐரோப்பாவை நேசப் படைகள் தாக்கிக் கொண்டிருக்கின்றன வென்று ஹாஹா பிரபு, பெர்லின் வானொலி நிலையத்தினின்று உறுமிக் கொண்டிருக்கிறார். உண்மையிலேயே ஜெர்மன் படைகளுக்கு ஆபத்தே கிடையாதாம்! அவை பின் வாங்குவதும் பூண்டோடு அழிந்து போவதும், ஹிட்லரின் இரகசியத் திட்டப்படியே நடை பெறுகின்றனவாம்! ஜெர்மனிக்கு ஏராளமான இரகசிய ஆயுதங்கள் இருந்தனவாம். லட்சியத்திற்காகவே தான் ஜெர்மனி போராடுகிறதாம். பெருந் தளவாடங்களையும் படையையுங் கொண்டு போராடுவது அவருடைய லட்சியமல்லவாம்! இது ஒரு அறிவுப் பேரராட்டமே யொழிய, படைக் கப்பலகள், ஆயுதந் தாங்கிய படைகள், வெடிகுண்டு விமானங்கள் ஆகியவற்றைக் கொண்ட முக்கியமல்லாத லௌகீகப் போராட்டமல்ல! இது தளவாடப் போராட்டமல்ல; ஆனால், சொற் போர் என்று தான் கூறினார்.

இது ஒரு வாய்ப் போர் என்பதை யாரும் மறுக்கவில்லை. இது ஒரு லட்சியத்திற்காக நடைபெறும் போராட்டம் என்று கூறுகிறவர் யார்? காலிகளின் பிரதிநிதியா யிருந்து பேசுகிறவர். இந்தக் காலிகள் முதலில் தம் ஆயுத பலத்தைக் கொண்டு, ஒரு குற்றமும் செய்திராத சிறு நாடுகளை ஈவிரக்கமில்லாமல் நாசப்படுத்தியவர்கள். இவர்களுடைய பிரதிநிதி இப்படி யெல்லாம் கூறுவது, நாஜி இராணுவத்தின் பலவீனத்தை ஒப்புக் கொள்ளுவதாகும்.

ஜெர்மனியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. இந்தக் காரணங்களால் தான், பிரான்சில், நமது படைகள் திடீர் திடீரென்று மகத்தான முறையில் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இக்காரணங்களில் முக்கியமானவையாவது:—(1) நமது உயரிய கப்பற் படை பலம். (2) நமது உயரிய விமானப் படை பலம். (3) நமது மனோ பலம்.

ஜெர்மனியின் மகா பலவீனம்

நமது மகத்தான படையெடுப்புக்களுக்கு உதவியா யிருந்தது நமது சிறந்த கப்பற் படை பலந்தான். இந்தப் படைக் கப்பல்கள் படையினரையும், தளவாடங்களையும் சப்ளைகளையும், ஏற்றிக் கொண்டு போவது மட்டுமன்றி, எதிரி துறைமுகங்களையும் நீர்மூழ்கிக் கப்பல் தளங்களையும், எதிரி கடற்கரைகளையும் வெடிகுண்டுகளால் தாக்குகின்றன. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களின் அட்டகாசம் ஒடுங்கிய பிறகு, தூரம் ஒரு பொருட்டாயில்லை. அங்கே வேட்டையாடிக் கொண்டிருந்தவை இப்போது வேட்டையாடப் படுகின்றன. 1939-ம் வருஷம் செப்டம்பர் மாதம் இந்த மகா யுத்தம் ஆரம்பமானது. அதற்கு 2 மாதங்களுக்குப் பிறகு அதாவது 1939-ம் வருஷம் நவம்பர் மாதத்தில், ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு அறிக்கை பிறப்பித்தார். அதன்படி, தளவாட ஏற்றுமதித் தடை யுத்தரவை ரத்து செய்தார். ஆகவே, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் ரொக்கங் கொடுத்து, தளவாடங்களைத் தம் சொந்தக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு போக முடிந்தது. எனவே, கப்பல் படை வலுத்தது. ஏனென்றால், ஜெர்மனிக்குக் கப்பல்களுமில்லை, பணமுமில்லை. ஹிட்லருடைய அகக் கண்ணிற்கு ஐரோப்பாக் கண்டம் மட்டுந்தான், அதிலும் ஜெர்மனி மட்டுந்தான் புலப்பட்டதே யொழிய, உலகம் முழுதும் தோன்றவில்லை. உலகத்தின் பெரும் பகுதி தண்ணீர். ஹிட்லருக்கு பெருந் தரைப் பகுதி மட்டுத் தான் தோன்றியது. ஆகவே தான், ரஷ்யாவைத் தாக்கினார். நேச நாட்டினர் புத்திசாலிகள். இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகவே, நேச நாடுகளின் அரசாங்கத் தலைவர்களோடு ஆலோசித்து மிஸ்டர் சர்ச்சில் வெகு ஜாக்கிரதையாக ஒரு திட்டம் வகுத்தார். இந்தத் திட்டம் இப்போது நிறைவேற்றப் பட்டு வருகிறது. ஏழு கடல்களிலும் படைகளையும் தளவாடங்களையும் ஏற்றி யனுப்புவது பற்றியது தான் அந்தத் திட்டம்.

ஜெர்மன் கடற் படையைக் குறித்து ஜெர்மன் மக்கள் நாஜிகளைக் கேட்பார்களானால், நாஜிகள் பாடு திண்டாட்டமாகத் தான் இருக்கும். அந்தப் போர்க் கப்பல்களும் மிகவும் அற்பமானவை. அதை ஒரு கப்பற் படை யென்றே சொல்லுவதற்கில்லை. இந்தப் படை நிரந்தரமாக பால்டிக் கடலைச் சேர்ந்த கேல் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. 4000 போர்க் கப்பல்களைக் கொண்ட பெரும் படையோடு இந்த அற்பப் படை

என்ன செய்ய முடியும்? இந்தப் பெரும் படையின் உதவியைக் கொண்டு தான் நேசப் படைகள் நார்மண்டியில் போயிறங்கின. ரிவேராவில் போய் இறங்குவதற்கு 800 கப்பல்களே போதுமானவையா யிருந்தன. ஏனென்றால், மத்திய தரைக் கடலிலேயே ஜெர்மன் கப்பல் ஒன்றுகூடக் கிடையாது.

நேசப் படைகளின் பலம்.

நேசப் படைகளின் விமான பலமும் விமானத் தாக்குதல்களும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கின்றன. 14,000 படைகளை ஏற்றிக்கொண்டு போவதற்கு அநேக விமானங்கள் தேவையா யிருக்கின்றன. என்றாலும் ஏற்றிக்கொண்டு தான் போகப்படுகின்றன. அது மட்டு மன்று, பிரிட்டிஷ் விமானப் படையும், அமெரிக்க விமானப் படையும் நாள் ஒன்றிற்கு 4,000 முறை பறந்து வட்டமிட்டிருக்கின்றன. நார்மண்டியினின்று பின்வாங்கி யோடும் ஜெர்மன் 7-ம் படையை சிதறடித்தது, நமது 'டைபூன்' விமானங்கள் தான். பாரீசைச் சுற்றிலுமுள்ள நூற்றுக்கணக்கான ரயில் இஞ்ஜின்களையும் ஆயிரக்கணக்கான வண்டிகளையும் அமெரிக்கப் படைகள் நாசஞ் செய்து ரயில் போக்கு வரவிற்கு இடமில்லாதபடி செய்துவிட்டார்கள். நாஜி ஸ்தானங்களில் நேச விமானப் படைகள் ஜூலை மாதத்தில் மட்டும் 1,37,000 டன் வெடிகுண்டுகளை எறிந்தனர். இது $1\frac{1}{2}$ லட்சம் நாஜிகளின் பறக்கும் குண்டுகளுக்குச் சமமாகும். இதுவரை 6 600 பறக்கும் குண்டுகளைத் தான் நாஜிகள் விடுத்திருக்கிறார்கள். ஜூலை மாதத்தில் ஒரு ஜெர்மன் விமானங் கூட இங்கிலிஷ் கால்வாயைக் கடந்து வரவில்லை.

நேச நாடுகளின் தரைப் படையும் கப்பற் படையும் விமானப் படையும் அற்புதமாக ஒத்துழைத்தன. அதன் பயனாக, ஜெர்மானியர்களுக்குப் பெரும் பாதகமும் நாசமும் ஏற்பட்டன. இப்போது துருக்கி வழியாக ஜெர்மானியர்கள் போகவர முடியாது. அன்றியும் எண்ணெய் கிடைப்பதும் அரிதாகி விட்டது. உள் நாட்டின் போக்கு வரவு சாதனங்களும், தொழிற் சாலைகளும் துறைமுகங்களும் கிடங்குகளும் ஜெர்மனியில் நாசமாக்கப்பட்டு வருகின்றன. சிக்கிக் கொள்ளும் ஜெர்மானியர்கள் அங்கு மிங்கும் ஓடிக்கொண்டுதா னிருப்பார்கள். பாலெஸ்தீன கணவாயில் எப்படி ரோமருடைய படைகளின் தலையெழுத்து முடிந்ததுவோ, அதுபோலவே, இங்கேயும் அவர்களுடைய மண்டையோலை கிழிந்து விடும்.

நமது மனோ உரமும் கடமையும்.

நமது இலட்சியங்களுக்கும் எதிரி இலட்சியங்களுக்கும் பரந்த வேற்றுமை யுண்டு. அதை லட்சியம் என்று சொல்லுவதே அவ்வளவு பொருத்தமாகாது. நமது லட்சியத்தின் அடிப்படையான கொள்கை ஜனநாயகம். சிறை முகாம்களையும் சித்திரவதையையும் துணையாகக் கொண்டவர்களான காட்டுமிராண்டிகள், நம் கொள்கையைக் கேவலமானதாகக் கருதுகிறார்கள். ஆராய்ச்சியையும் அனுபவத்தையும் கொண்டு தான், உலகம் முன்னேற்றத் துறையில் நிர்மாணிக்கப்படவேண்டு மென்று, நேச நாட்டினர் தீர்மானித்தனர். ஆனால், ஒரு விஷயம் மட்டும் உண்மை. தம் வாக்குறுதிகளை ஜெர்மானியர்கள் காப்பாற்றிக் கொள்ள மாட்டார்க ளென்றாலும், உறுதிமொழிகளை நிறைவேற்றலாம் என்று அவர்களுக்குத் தெரியும். ஜெர்மானியர்களால் அடிமைப் பட்டிருக்கும் மக்களுக்கு, நேச நாட்டினர் தாம் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தான் போகிறார்கள். இந்த மக்களை நாம் விடுவித்தே தீருவோம். பரிபூரண தோல்வி என்றால் என்னவென்பதை ஜெர்மானியர்கள் உணர்ந்து கொள்ளுகிற போது, நம் வார்த்தைகளை நாம் காப்பாற்றுவோம் என்பதையும் உணர்ந்து கொள்ளுவார்கள். சென்ற 10 வருஷங்களாக அவர்கள் உலக மக்களைப் படுத்திய கொடுமைகளுக்கு அவர்கள் பதில் சொல்லியே தீர வேண்டும். அடிமைப் பட்ட நாடுகளுக்கு நம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நமது மகத்தான பலத்தைக் குறித்து ஜெர்மன் மக்கள் ஏற்கெனவே உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் தம் தலை தப்பும் பொருட்டு அரும் போராடுவது இயற்கை தான். "அடாது செய்வோர் படாது படுவர்" அல்லவா? இப்போது அவர்களுடைய மண்டைப் புழு மாண்டு விட்டதென்று சொல்லலாம்.

பிரான்சு நீடூழி வாழ்க

கடைசியாக பிரான்சு மீண்டது. மூன்றரை மாதங்களுக்கு முன்பு ஆல்ஜியர்ஸில் ஜெனரல் டிகால் ஒரு வாக்குறுதி கொடுத்தார். அதாவது, உள் நாட்டிலுள்ள சுயேச்சை பிரஞ்சுப் படைகள், பிரஞ்சு நேசப் படைகளின் மகத்தான பெரு முயற்சியில் கலந்து கொள்ளும் என்று ஆலோசனைக் கமிட்டியாரிடம் கூறினர். அவர் வாக்குறுதி பரிபூரணமாக நிறைவேறிவிட்டது. இந்த உலகக் கலா நகரத்தை மீட்டது பற்றி, பிரான்சிலுள்ள ஆண்களும் பெண்களும் பெரு மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள். அம்மகிழ்ச்சியில், உலகிலுள்ள பலகோடி மக்களும் பங்கு கொள்ளுகிறார்கள். சென்ற 4 வருஷங்களாக இதற்காகத் தான் பெரிதும் ஆசை கொண்டிருந்தார்கள். பாரீஸ் மீண்டும் புத்துயிர் பெற்று வாழும். தூக்கந் தெளிந்தெழுந்த வீரனைப் போலிருக்கிறது பிரான்சு. இன்னும் அடிமைப் பட்டுக் கிடக்கும் நாடுகளிலுள்ள நாட்டுப் பற்றுடையவர்களுக்கு, இந்த அற்புதமான செய்தி, பெரிதும் ஊக்கமளிக்கும். இந்தச் செய்தியைக் கேட்கும் நேசப் படைகளும், பிடிவாதத்தோடும், ஈவிரக்கமில்லாமலும் வீரத்தோடும், பாரீஸ் வீரமக்கள் போராடி வெற்றி பெற்றதை போல, போராடும். இது ஒரு வெற்றி வேளை. பிரஞ்சு மக்கள் விழாக் கொண்டாடத் தக்க தருணம். என்றாலும் நாஜி விலங்கு மடிந்து ஒழிகிற வரையிலும், போராட்டம் மேலும் மேலும் கடுமையாக நடந்து கொண்டிருக்க வேண்டியது தான். இதுபற்றி மண்ட்காமரி கூறியதாவது:—

"யுத்தத்தின் முடிவு காலம் தோற்றுகிறது. மகா விரைவாகவும் சீக்கிரமாகவும் நம் வேலையை முடித்துவிடுவோம்."

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

சர்ச்சில் தன்னுடைய இரண்டு வருஷத் திட்டம் நிறைவேற்றப்படுவதை நேரில் கண்டு களிக்க விரும்பினர். ஆகையால் தான், பிரான்சின் தென் கரையில் நேசப் படைகள் போய் இறங்கியபோது, தானே அங்கிருந்து அனைத்தையும் நேரில் கண்டார். இந்த மகா யுத்த காலத்தில், இந்த எழுபது வயது இளைஞரின் உணர்ச்சி, உலகம் முழுதுக்குமே ஊக்கம் கொடுக்கிறது. தென்பகுதியிலுள்ள ஜெர்மன் படைகளெல்லாம் காலியான உடனேயே மேலும் தன் நோக்கப்படி அவர் அனைத்தையும் நடத்துவார். அவர் இப்போது இத்தாலியிலிருப்பதற்கு இது ஒரு அற்பமான காரணந் தான். இங்கே எதிர் பார்த்ததை விட முன்னேற்றம் மிகவும் விரைவா யிருக்கிறது. சுயேச்சைப் படையினரான மகா வீரர்கள் தக்கபடி உதவி செய்கின்றனர். ஆகவே மூவகைப் படைகளும், ஒன்று சேர்ந்து முழு மூச்சாகத் தாக்கக் கூடும். இப்போதுள்ள முன்னேற்ற வேகத்தைக் கொண்டு கணக்கிட்டால், இன்னும் சில நாட்களில், சீன் ஆற்றின் முகத்துவாரத்தி லிருந்து ஸ்பெய்ன் எல்லைப்புரம் வரையிலும், மத்தியதரைக் கடற்கரை வரையும் நேசப் படையினர் பிரான்சை மீட்டு விடுவார்கள். விஷியில் ஜெர்மானியர்கள் மிகவும் பலவீனமாயிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் பாரிசுக்குக் கிழக்கே பின்வாங்கிக் கொண்டிருக்கிருர்கள். இது, தம் படைகளைத் திரட்டிக்கொண்டு முடிவான போராட்டத்திற்குத் தம்மை ஆயத்தம் செய்துகொள்ளும் பொருட்டாயு மிருக்கலாம். மகினுட் அரணைப் பற்றியோ, சீஜ்ப்ரிட் அரணைப் பற்றியோ ஒரு செய்தியும் வெளிவரா திருப்பது உண்மையிலேயே மிகவும் ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. இது கொப்பல்சின் வித்தாரப் பேச்சாக இருந்தாலும் இருக்கலாம். உள் நாட்டிலுள்ள பிரஞ்சுப் படைகள், நெடுநாட்களாக மக்கள் உள்ளத்தே பொங்கிக் கொண்டிருந்த நாட்டுப் பற்றுணர்ச்சியை உருவாக்குகின்ருர்கள். உள் நாட்டுப் போராட்டத்தை நடத்துவதற்கு ஜெனரல் டிகாலும் ஜெனரல் கோனிக்கும் அங்கே யிருக்கின்ருர்கள். பிரான்சுக்கு மட்டு மன்றி உலகம் முழுதுக்குமே இது ஒரு மீட்சி வாரமாகத் திகழ்கிறது.

இத்தாலி வேலைக்காகக் காத்திருக்கிறது.

ஜெனரல் அலெக்சாந்தர் கெட்டிக்காரத்தனமாக ஜெனரல் கேசல்ரிங்கின் படைகளை பிளாரென்சி னின்று, போ பள்ளத்தாக்கிற்குள் விரட்டினர். இந்தப் பள்ளத்தாக்கு லம்பார்டி சமவெளியி லிருக்கிறது. இதற்கு கோதிக் அரண் என்றும் பெயர். இது நேசப் படையினருக்கு மிகவும் முக்கியமானது. நேசப் படைகளின் போர் தந்திர முறைகள் பலிக்க ஒட்டாதபடி தாமதப்படுத்த விரும்பும் ஜெர்மன் படைகளின் ஆசை மண்ணைக் கவ்வியது. ப்ளாரென்ஸ் நகரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ஜெனரல் கேசல்ரிங் தனது சிறந்த படைகளில் 5 டிவிஷன்களை அங்குள்ள மலையை யொட்டி அரை வட்டமாக அமைத்திருந்தார். அப் படைகள் மகா கடூரமாகப் போராடின. இதினின்று ப்ளாரென்ஸ் நகரம் எவ்வளவு முக்கியமானதென்று விளங்கும்.

பழிவாங்கும் தன்மையில் நாஜிகள் மிகவும் தேர்ந்தவர்கள். இந்த உணர்ச்சியோடு எதிரி பீரங்கிகள் ப்ளாரென்சியினின்று முழங்கிக் கொண்டே யிருந்தன. இது பற்றி "ப்ளாரென்சைக் காப்பாற்றும் பொருட்டுத் தான் ஜெர்மன் தரைப் படை தன்னுலானவரைப் போராடியது" என்று கோப்பல்ஸ் கூறியது முற்றும் உண்மைதான். அடுத்தாற்போல் ஜெனரல் அலெக்ஸாந்தர் என்ன செய்யப் போகிருரென்று திட்டமாகச் சொல்வதற்கில்லை. எதிரியை லம்பார்டி சம வெளிகளில் தாக்கி யழிக்கலாம்; அல்லது, யுகோஸ்லாவியாவைத் தாக்குவதற்கு இத்தாலியைப் பாய்ச்சல் தளமாகக் கொள்ளலாம். மார்ஷல் டிட்டோவின் படைகள் மிகச் சிறந்ததோர் சந்தர்ப்பத்தை யளித்திருக்கின்றன. இதை, பிரான்சின் மீது ஒரு புதிய படையெடுப்புக்குச் சமமாகக் கூறலாம். அங்கே சுயேச்சைக் கட்சியினர் நேசப் படையினருக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். பிரான்சில் எதிரிப் படைகளை விரட்டிக் கொண்டே நேசப் படைகள் முன்னேறின. இது ஒரு மிகச் சிறந்த தோர் போர்த் தந்திர முறை. ஐரோப்பியப் போர் முனையில் மீண்டும் அதே முறையை நேசப் படைகள் மேற்கொள்ளவுங் கூடும்.

ருமேனியாவை ரஷ்யா தாக்குகிறது.

ஜெர்மானியர்களின் பலம் எப்படி யிருக்கிற தென்று சோதிக்கும் பொருட்டு ஆங்காங்கே செம் படைகள் தாக்கின. லாட்வியாவிலும் எஸ்டோனியாவிலும் உள்ள ஜெர்மன் படைகளைப் பிரிக்கும் மகத்தான ருஷ்ய அரணைத் துளைத்துக் கொண்டு செல்ல ஜெர்மன் படைகள் அரும் பாடு பட்டன. ஆனுல் முடியவில்லை. அவர்களை ரஷ்யர்கள் திருப்பியடித்து விட்டார்கள். இதினின்று பால்டிக் போர் முனையில், ரஷ்யர்கள் கைதான் ஓங்கி யிருக்கிற தென்று களக்க மறத் தெரிகிறது. இதனுல் ஜெர்மானியர்களுக்கு ஏராளமான படைகளும் தளவாடங்களும் சேதம். வார்சா பகுதியிலும் நேசப் படைகள் வெகுவாக முன்னேறிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இன்னும் தெற்கே, விஸ்டுலா ஆற்றங் கரைகளில் பல இடங்களைக் கைப்பற்றி யிருப்பதாகத் தெரிகிறது. வார்சா படிப்படியாக வளைக்கப்பட்டு வருகிறது. இதைக் கைப்பற்றிய பிறகு, கிழக்குப் பிரஷ்யாவிலுள்ள மற்றொரு ஜெர்மன் படையைத் தாண்டி சிக்கலைத்துக் கொண்டு, டான்சிக்கை நோக்கிப் போகலாம். இந்த 700 மைல் நீளமுள்ள போர் முனைக்கு மேலும் தெற்கே, ஹிட்லருடைய படைகளிருக்கின்றன. அவற்றையும் சோவியத் படைகள் தாக்கி நிர்மூலப்படுத்தலாம். இங்கே ஜெர்மன் படைகளை பலவீனப்படுத்திய பிறகு, டால்மேடியா கடற் கரையை நேசப் படைகள் தாக்குவதற்கு வசதியாயிருக்கும். ஜெர்மன் கப்பல்களையும் போக்கு வரவு சாதனங்களையும் இயங்க ஒட்டாமற் செய்யும் பொருட்டு, கான்ஸ்டென்ஸா, சூலைன் என்னும் துறை முகங்களை நேசப் படைகள் வெடி குண்டுகளால் தாக்கின.

இப்போது ருமேனியா அரசாங்கம் நேச நாடுகளுடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இதனுல் ஜெர்மனியோடு தான் ஏற்கெனவே செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது. இதை யொட்டி பலகேரியாவும் தான் ஜெர்மனியோடு செய்து கொண்டிருந்த ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது. செக்கோஸ்லோவேகியாவும் ஜெர்மனியை விட்டுப் பிரிந்து விட்டது. இந்தச் சமயத்தில் டிட்டோவின் படைகள் வலுத்துக் கொண்டு வருகின்றன. நிலைமையை விரைவில் உணர்ந்து போரை நடத்துவதற்கு மிஸ்டர் சர்ச்சில் இப்போது இத்தாலியி லிருக்கிருர்.

இந்த நிலைமையில் ஹிட்லர் எதற்கென்று ஈடு கொடுப்பார். ஹிட்லரைப் பிடித்த பிசாசு ஜெர்மனியையும் சேர்த்துப் பிடித்திருக்கிருப் போலிருக்கிறது.

காட்டுப் போரில் கெட்டிக்காரர்கள்.

பர்மாவிலும் வெற்றி மேல் வெற்றி கிடைப்பதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இங்கே எல்லா இனத்தவரும் நிறத்தவரும் மகா வீரத்தோடு போராடிக் கொண்டி ருக்கிருர்கள். இவர்களுள் சென்னைக் காரர்களின் வீரம் பெரிதும் மெச்சத் தக்கது. பெரும் வெள்ளத்தில் ஆறுகளில் இடுப்பளவு தண்ணீரில் நடந்து கொண்டு போய் மகா வெற்றிகரமாகப் போராடினர். இந்தியாவிலேயே ஜப்பானிய சிப்பாய் ஒருவன் கூட இல்லாதபடி விரட்டி விட்டனர். இந்தியாவில் ஜப்பானியன் தொந்தரவில்லையானுலும் கூட, பர்மாவில் மகா மூர்க்கரும் அநியாயக்காரருமான ஜப்பானியர்கள் மிகுந்திருக்கிருர்கள்.

வட பர்மாவில் பள்ளத்தாக்குகள் சாதாரணமாகத் தென் வடலாக ஓடுகின்றன. இங்குள்ள ஜப்பானியப் படைகளை நேசப் படைகள் விரட்டி யடித்துக் கொண்டு முன்னேறுகின்றன. ரோடுகளின் இரு புரங்களிலும், ரயில்வேயிலும், ஆற்றங் கரைகளிலும் எங்கு பார்த்தாலும் ஜப்பானியப் பிணங்களும், அவர்கள் கைவிட்டுப் போன தளவாடங்களுந் தான் காணப்படுகின்றன வென்று ஒரு ஆங்கிலேய சோல்ஜர் குறிப்பிட்டார். இந்த

(11-ம் பக்கம் பார்க்க)

சுறா மீன் வேட்டை

சுறா மீன் எண்ணெய் உற்பத்தியை இந்தியாவின் மிகப் புதிய தோர் கைத் தொழில் என்று சொல்லலாம். இந்தியாவின் கடற் கரையில் நீராட ஒட்டாதபடி தடுக்கும் ஒரு பெருந் தொல்லையாக மட்டுந் தான் இந்தச் சுறா மீன்கள் இருப்பதாக, யுதத்திற்கு முன்பு, பெரும் பாலான மக்கள் நினைத்தார்கள். இப்போது சுறா மீனின் கல்லீரலிலிருக்கும் 'விட்டமின் ஏ' என்னும் சத்து வேறெந்தப் பொருளிலும் கிடையாதென்று ஏறக் குறைய அனைவரும் உணர்ந்திருக்கின்றனர். 'காட் லிவர் ஆயில்' விலை அதிகம். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. இதை விடச் சத்தானதும், இந்தியக் கரைகளிலேயே கிடைக்கக் கூடியதும், மலிவானதுமான சுறா மீன் எண்ணெய் கிடைக்கும் போது 'காட் லிவர் ஆயிலை என் ௦ாங்கவேண்டும்'?

இந்த எண்ணெய் பல வகைகளில் பயன்படுகிறது. முக்கியமாக, காட் லிவர் ஆயிலுக்கு பதிலாகச் சுறா மீன் எண்ணெயைப் பயன் படுத்துகிறார்கள். தோல் பதனிடுவதற்குப் ஏராளமாய்ப் பயன் படுத்துகிறார்கள். மிகவும் அதிகமாகக் கொதிக்க விடப்படாத எண்ணெயைக் கொண்டு, 'டர்பாலின்', எண்ணெய்த் துணிகள் முதலியன செய்யப்படுகின்றன. ரப்பருக்குப் பதிலாகக் கையாளப் படத் தக்க தோர் பொருளையும் இதினின்று செய்கிறார்கள். கீழ்த்தரமான சவுக்காரங்கள் செய்வதற்கும், எஃகைப் பதப் படுத்துவதற்கும் சில சமயங்களில் இதைப் பயன் படுத்துகிறார்கள்.

இந்த மீன் சதையை எலுமிச்சை ரசத்தில் ஊறவைத்து ஊறுகாய் செய்து தேங்காய்ப் பாலுடன் கலந்து வைத்து உண்ணுகிறார்கள். இதைத் தான் தென் கடற் பகுதிகளில் "பாய் பாய்" என்னும் உணவென்று வெகுவாகப் புகழுகிறார்கள். மனிதரைக் கடித்துண்ணும் மீனை மனிதன் கடித்துண்ணுவது மிகவும் பொருத்தமல்லவா?

வேட்டைக்குக் கிளம்புதல்

சென்னைக் கரையாளர்கள் மிகவும் வீர மிக்கச் செயல்களில் ஒன்றைச் செய்து கொண்டு வருகிறார்கள். இதே பேர்வழிகள் தான், காவலர்களாகவும் வேலை செய்கிறார்கள். தம் வாழ் நாட்களைக் கடலிலேயே கழிக்கிறார்கள் என்று சொல்லலாம். அவர்களுக்கு ஒரு கோவணந் தான் ஆடை. கடல் தண்ணீரும் சூரியனுந் தான் அவர்களுக்கு நண்பர்கள். அவர்கள் ஏறிச் செல்லும் கட்டு மரங்கள் தான் மகா பண்டைக் கால சாதனமா யிருந்திருக்க வேண்டும். இது மிகவும் பாதுகாப்பானது என்று சொன்னால், யாரும் எளிதில் நம்பமாட்டார்கள். சில மரக் கட்டைகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு கயிற்றால் பிணைத்துக் கட்டப் பட்டது தான், கட்டு மரம். இந்தக் கட்டு மரத்தின் மேல் அலைகள் தாவித் தாவிப் பாய்கின்றன. என்றாலும் அது மிதந்து கொண்டு தானிருக்கிறது. இப்படிப்பட்ட கட்டு மரங்களின் மீதேறித் தான் இந்த பலம் மிகுந்த கரையாளர்கள் கடற் புலிகளை, மனிதரை விழுங்கும் சுறா மீன்களைப் பிடிக்கப் போகிறார்கள்.

கரையாளர்கள் அருணோதய வேளைக்குக் கிளம்புகிறார்கள். அந்தக் கட்டு மரத்தில், தூண்டி முள், அதில் கோர்த்து வைப்பதற்கான மீன் உணவு, அரிசிக் கஞ்சி ஆகியவை தான் ஏற்றப் படுகின்றன. கட்டு மரங்கள் கரையை விட்டுக் கிளம்புவது தான் மகா கஷ்டமான தோர் காரியம். ஏனென்றால் அலைகள் இந்தக் கட்டு மரங்களை எளிதில் அடித்துக் கொண்டு வந்து கரை சேர்த்து விடுகின்றன. இருந்தாலும், இந்த அலைகளையெல்லாம் சமாளித்துக் கொண்டு நடுக் கடலுக்குப் போய் விடுகிறார்கள். இந்த அலைகளைக் கடந்து வந்த பிறகு, பாய் மரங்களைக் காற்று வாக்கில் கட்டி விடுகிறார்கள். ஒரு மணி நேரத்தில் மீன் பிடிக்க வேண்டிய இடத்திற்குக் கட்டு மரங்கள் வந்து சேருகின்றன. இது கடற் கரையினின்று ஏறக் குறைய 10 மைல் தூரமிருக்கும்.

மீன் பிடிக்கப்படும் இடத்தில் முதலாவதாக ஆழம் எவ்வள வென்று கண்டு பிடிக்கப்படுகிறது. அதைக் கொண்டு தூண்டி முள் எவ்வளவு கன மிருக்க வேண்டு மென்று நிர்ணயிக்கப்படுகிறது. இந்தத் தூண்டி முட்களில் மாட்டிறைச்சித் துண்டுகள் குத்தப் படுகின்றன. தக்கைக்குப் பதிலாக, காலி மண்ணெண்ணெய் டப்பிகள் கட்டி விடப்படுகின்றன. இந்த டப்பிகளும் நங்கூரமும் கடலில் பாய்ச்சப் படுகின்றன. என்றாலும் கட்டு மரம் மேலும் போய்க் கொண்டு தானிருக்கிறது. ஒவ்வொன்றாகப் பத்துத் தூண்டி முட்கள் போடப் பட்ட பிறகு, கட்டு மரம் வந்த வழியே திரும்புகிறது. இப்போது சுறா வேட்டையின் முதற் கட்டம் முடிந்து விட்டது. மோப்பம் பிடிப்பதில், குறிப்பாக பச்சை இறைச்சியை மோப்பம் பிடிப்பதில் சுறா மீன்கள் மிகவும் கெட்டி. இறைச்சித் துண்டை சுறா மீன் கௌவினால், அதினின்று தப்புவிக்க அது அரும்பாடுபடுகிறது. அப்போது தூண்டில் சங்கிலிகளும் அறுந்து போவதுண்டு. சில சமயங்களில் வளைந்திருக்கும் தூண்டி முள் நீண்டு போய், சுறா மீன் தப்பிக் கொள்ளுவது முண்டு. இப்படிப் போராடும் போது அதன் சிதழ்களில் இரத்தங் கட்டிக் கொண்டு, அதனால் மூச்சு விட முடியாமற் போவது முண்டு.

மகா ஆபத்தான வேலை

மறு நாட் காலையில் தூண்டிகள் போடப்பட்ட இடங்களுக்கு அவர்கள் வருகிறார்கள். அவர்கள் அதிர்ஷ்டசாலிகளாயிருந்தால் 7 சுறா மீன்களுங் கூட தூண்டில்களில் சிக்கிக் கொண்டிருக்கும். இவற்றை வெகு ஜாக்கிரதையாகக் கரை சேர்க்க வேண்டும். ஒரு சுறா உயிரோடிருந்தாலும் மகா ஆபத்தாக முடியும். அதன் வாலினால் ஒரு அடி அடித்தாலும் ஆளை நொறுக்கிவிடும். சுறா மீன் உயிரோடு சிக்கிக் கொண்டிருந்தால் மகா எச்சரிக்கையோடு கையாள வேண்டும். ஒரு பலமான தடியின் ஒரு நுனையில் ஒரு உறுதியான சுறா முள்ளைச் சொருகி வைத்து அதைக் கொண்டு கையாள வேண்டும். அது செயலற்றுப் போன பிறகு தான் அதைக் கட்டு மரத்தின் மேல் தூக்கிப் போடுகிறார்கள். இப்படியாகப் பிடிப்பட்ட சுறா மீன்களைக் கட்டு மரத்தில் ஏற்றிய பிறகு, சுறா மீன் கறியைத் தூண்டி முட்களில் கோர்த்து முன் போலவே மீண்டும் தண்ணீரில் விடுகிறார்கள். பிறகு சுறா மீன்களை யெல்லாம் கட்டு மரத்தோடு பிணைத்துக் கட்டிக் கொண்டு கரைக்கு வருகிறார்கள்.

இவற்றைக் கரை யேற்றியவுடனே, அறுத்து அதன் கல்லீரலை எடுக்கிறார்கள். ஒரு சுறா மீன் சாதாரணமாக 800 பவுண்ட் கனமிருக்கும். அதன் கல்லீரல்கள் இரண்டும் சேர்ந்து 200 பவுண்டு கனமிருக்கும். உடனே அவை தொழிற் சாலைக்கு அனுப்பப்படுகின்றன. அங்கே சுறா மீன் எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

இந்தக் கல்லீரலை பெரிய செப்புப் பாத்திரங்களில் நீராவியில் வேக வைக்கிறார்கள். அப்போது வெளிப்படும் எண்ணெய், மிதக்கிறது. அதை மேலாக வடித்துக் கொள்ளுகிறார்கள். எவ்வளவிற் கெவ்வளவு பச்சையாக இது பக்குவப் படுத்தப்படுகிறதோ, அவ்வளவிற் கவ்வளவு எண்ணெய் நிறமாகவும், மணமாகவும், உருசியாகவும் இருக்கிறது. வியாபாரத்திற் கென்று தயாரிக்கப்படும் சுறா மீன் எண்ணெய் இலேசான பழுப்பு நிறமாகவும் இலேசான கருப்பு நிறமாகவும் இருக்கின்றன.

எதையும் தின்னும்

உண்ணுவதில் இவை தீப்பறவை யோடு போட்டி யிடுகின்றன. ஒரு சுறா மீன் வயிற்றில் 2 டஜன் 'சாடின் மீன்களைக் கொண்ட தகர டப்பிகள் இருந்ததாகத் தெரிகிறது. கடற் பாம்புகள், சிறு மீன் கூட்டங்கள், நீராட வருகிறவர்களின் கால்கள், சுறாக் குட்டிகள் முதலியவற்றை இவை தின்னும். சில சமயங்களில் ஆடுகளின் எலும்புகள் அவற்றின் வயிற்றில் காணப்படுகின்றன.

கரையாளர்கள் அதன் தசையை விற்கிறார்கள். அதன் கனத்திற்குத் தக்கபடி விலை வைக்கிறார்கள். தகுந்த விலை கிடைக்கா விட்டால், அதைத் துண்டு போட்டு கருவாடாக்கி பிறகு விற்கிறார்கள்.

ஒரு வாரத்தில் 6 நாட்கள் சுறா வேட்டையாடுகிறார்கள். 6-ம் நாள் தூண்டில் சங்கிலிகளும் முட்களும் பழுது பார்க்கப்பட வேண்டி, கரைக்குக் கொண்டுவரப் படுகின்றன. மறு வாரம் வேட்டையாடுவதற்குத் தயார் செய்யப்படுகின்றன.

இந்தக் கைத் தொழிலால், மக்கள் பலம் பெறுவதற்கு வேண்டிய எண்ணெய் கிடைப்பது மட்டுமன்றி, பலருக்கு வேலை தரக் கூடிய கைத் தொழிலும் விருத்தியாகிறது.

"மிலிடேரி சொக்கன்"

சொக்கன் என்று நம்மால் பரிகாசமாக அழைக்கப்படும் சொக்கலிங்கக் கவுண்டர் மாரிமுத்துக் கவுண்டரின் இரண்டாவது பிள்ளை. புலிகிடந்தான்பட்டியிலுள்ள அத்தனைப் பேருக்கும் சொக்கன் என்றால் தான் அவரைத் தெரியும். கூட ஒரு பட்டப் பெயரும் அவ்வூரார் அவருக்குச் சூட்டி 'மிலிடேரி சொக்கன்' என்று அழைத்து வந்தார்கள். பின்னால் மிலிடரியில் சேர்ந்து அவர் புகழ் பெறப் போவதை அவர்கள் அறிந்திருந்தார்கள் போலும்.

மாரிமுத்துக் கவுண்டருக்குக் கொஞ்சம் காசு பணம் உண்டு; ஏதோ கடவுள் கொடுத்தது 10, 12 ஏக்கர் நஞ்சையும், 20, 25 ஏக்கர் புஞ்சையும் குடும்பத்திற்குச் சொந்தம். மாரிமுத்துக் கவுண்டரும் அவர் மூத்த பிள்ளையும் நன்றாகப் பாடுபடுவார்கள். சொக்கலிங்கக் கவுண்டரும் பாடுபடுவதிலோ, உழைப் பெடுப்பதிலோ சளைக்கிற பேர்வழியல்ல; நாளெல்லாம் வேண்டுமென்றாலும் தண்ணீர் இறைப்பார்; வேகாத வெய்யிலா யிருந்த போதிலும் ஏர் ஓட்ட வேண்டு மென்று மனதில் தோன்றி விட்டால், செய்து தான் முடிப்பார்.

ஆனால் சிறு வயதிலிருந்து கொஞ்சம் வெள்ளையாகத் துணி கட்டிக் கொண்டு வெளியே கிளம்புவதில் அவருக்கு விருப்பம் அதிகம். தலை மயிரைக் கிராப்பு வெட்டிக் கொண்டால், அது அவருடைய பிரியந் தானே? அதில் ஊராருக்கென்ன கவலை? ஓயாமல் சேற்றிலே நின்றுக் கொண்டு அதைச் செய் இதைச் செய் என்றால் வாலிப வயதில் கொஞ்சம் கஷ்டமாய்த் தான இருக்கும். குஸ்தி கற்றுக் கொண்டாலும் தடிகள் சுழற்றினாலும் உடம்புக்கு நல்லது தானே? ஆனால் அவருடைய சொந்தக் காரருக்கு அது பிடிக்கவில்லை. இரண்டொரு நாள் கொஞ்சம் விளையாட்டாக சொக்கலிங்கக் கவுண்டர் கிராமச் சுற்றுப் பிரயாணம் செய்து காலங் கழித்தால், ஊரார் அவர் பயிர் வேலைக்கு உதவாதவர், மிலிடேரியாய்த் திரிகிறவர் என்று முடிவு கட்டி விட்டார்கள்; பெயரும் சூட்டி விட்டார்கள். நல்ல வேளை, அவரைச் சோம்பேறி என்று மட்டும் சொல்ல வில்லை; சொன்னால் வாயிலிருக்கும் பற்கள் பத்திரமாயிரா என்ற பயத்தினாலோ என்னவோ! தகப்பனுருக்கு மட்டும், "நல்ல புத்திசாலி, சிறு பிள்ளை தானே, குடும்பக் கவலை தெரிந்து விட்டால் தானாக வேலை செய்கிறான்," என்ற எண்ணம். இன்னொன்று கூட தன்னையும் தன் மூத்த பிள்ளையையும் போலல்லாமல் கொஞ்சம் நாகரிகமாக சொக்கலிங்கம் இருப்பதில் அவருக்கு உள்ளுக்குள்ளாக கொஞ்சம் மகிழ்ச்சி!

சொக்கலிங்கக் கவுண்டருக்கு வயது இருபத்திரண்டு ஆயிற்று. அவருக்குக் கல்யாணம் செய்து வைத்து விட மாரிமுத்து கவுண்டர் விரும்பினார். ஆளோ வாட்ட சாட்டமாக ஆறடி வளர்ந்திருக்கிறார். கொஞ்சம் கருப்பாக இருந்தாலும் முகத்தில் அழகு வடிகிறது. வாலிப அழகு தனிப்பட்டதல்லவா? நல்ல குணம் தப்பான நடவடிக்கை ஒன்றும் கிடையாது. இப்படிப் பட்டவருக்கு யார் பெண் கொடுக்க மறுப்பார்கள்? எந்தப் பெண் தான் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேனென்று சொல்லும்? சொக்கலிங்கத்துக்குக் குப்பம்மாளைக் கட்டிக் கொள்ள விருப்பம்; குப்பம்மாளுக்கும் அப்படியே. ஒன்றுவது வகுப்பிற் ஒன்றிப் படித்தவர்கள். மேலே படிக்கவுமில்லை. நெருங்கிப் பழகவுமில்லை. இருந்தாலும் இருவருக்கும் ஒருவரை யொருவர் மணந்து கொள்ள விருப்பம். குப்பம்மாளின் தகப்பனார் வேலாயுதக் கவுண்டரும் பணம், குணம், அந்தஸ்து எல்லாம் உடையவர்.

மாரிமுத்துக் க்வுண்டர் பிள்ளையின் விருப்பத்தைத் தாய் மூல்யமா யறிந்து கொண்டார். ஒரு நல்ல நாள் பார்த்துப் பெரிய மனிதரொருவரை யனுப்பி வேலாயுதக் கவுண்டரைச் சொக்க கவுண்டருக்குப் பெண் கொடுக்கும்படி கேட்டார். ஆனால் அவருக்குக் கிடைத்த பதில் அவரைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது. அப்படிப் பட்ட பதிலை அவர் கொஞ்சமும் எதிர் பார்க்க வில்லை. "பிள்ளையை அழகாய் ஆளாக்கி வைத்திருந்தால் போதுமா? அது அடங்கி ஒடுங்கி வேலை செய்யக் கற்றுக் கொடுக்க வேண்டாமா? அதுவோ 'மிலிடேரி' என்ற பெயர் வாங்கி விட்டது! வேலை செய்யாமல் மிலிடேரியாய்ச் சுற்றுகிற ஆசாமிக்குப் பெண்ணைக் கொடுத்து விட்டு நாளைக்கு என்னால் திண்டாட முடியாது". என்று வேலாயுதக் கவுண்டர் சொல்லி யனுப்பிவிட்டார். சொக்கலிங்க கவுண்டருக்குச் சுருக்கென்று பட்டது இந்தச் சொற்கள். பெண்ணைப் பெற்றவர் கொடுக்க மறுத்துவிட்டால் தான் என்ன செய்ய முடியும்? விஷயம் அதோடு நின்றிருந்தாலும் பரவாயில்லை. அடுத்த பதினைந்தா நாளே குப்பம்மாள் அந்தக் கட்டுப் பெட்டிச் செங்காக் கவுண்டனின் மனைவியாகி விட்டாள்! சொக்கலிங்கக் கவுண்டருக் கேற்பட்ட மனோ வேதனை கொஞ்ச மல்ல. அவருடைய வேடிக்கையான பேச்சுக்களும் விளையாட்டான நடவடிக்கைகளும் மறைந்து போயின. வீட்டை விட்டுக் கூட அவர் அதிகமாக வெளியில் வருவதில்லை.

இந்தச் சமயத்தில் தான் ஹிட்லர் உலகத்தின் மகத்தான இரண்டாவது மா பெரும் போரை ஆரம்பித்து வைத்தார் ஐரோப்பாவிலே! இந்தியாவும் போரில் இறங்கிற்று. பொதுவாக இந்தியரும் சிறப்பாகத் தமிழ் நாட்டினரும் ஏராளமாகப் பட்டாளத்தில் பதிவு செய்து கொண்டு ஹிட்லருக்கு ஏற்ற பதில் கொடுக்க முன்னணிக்குச் சென்றார்கள். அவர்களின் மத்தியில் சொக்கலிங்கக் கவுண்டரும் காணப்பட்டார். பண்டை நாள் சேரனொருவன் காதல் கைகூடாததால் தளர்ந்திருந்த தன் உள்ளத்தையும் உடலையும் தேற்ற போர் மேல் சென்றானல்லவா? அவன் வழி வந்த சொக்கலிங்கச் கவுண்டர் தன் சோர்ந்து போன உள்ளத்தையும் உடலையும் தேற்ற பட்டாளத்தில் சேர்ந்ததில் ஆச்சர்யமென்ன இருக்கிறது?

கற்றிருந்த உடற் பயிற்சி விளையாட்டுகள் வீண் போகுமா? அவைச் சொக்கலிங்கக் கவுண்டரைப் பட்டாளப் பயிற்சியில் முதலில் நிறுத்தின. பட்டாள வாழ்க்கை அவருக்கு முற்றிலும் பிடித்தது. பயிற்சி முடிந்ததும் முன்னணிக்கு அனுப்பப் பட்டார்.

அவருடைய நடையும், சுறுசுறுப்பும், கம்பீரமும் மேலதிகாரிகளைக் கவர்ந்தன. அவரைத் தங்களின் கீழ் வைத்திருப்பதில் பல அதிகாரிகள் மகிழ்ச்சியும் செருக்குமடைந்தார்கள். பிறர் செய்ய அஞ்சும் வேலைகளைப் புலி போல் பாய்ந்து செய்வார் சொக்கலிங்கக் கவுண்டர்! காரியங்களில் வெற்றியும் காண்போர் வியப்பையும் ஒருங்கே கொள்ளை கொள்ளுவார்! வேவு பார்க்கப் படையமைத்தால் அதில் சொக்கக் கவுண்டர் இல்லாமலிருக்க முடியாது! அதிகாரிகள் மனதில் முன் வந்து நிற்பவர் அவர் தானே? வீரம், தீரம், உள்ளத்தின் உறுதி, சமயத்திற் கேற்ற சாமர்த்தியம், எல்லாம் மிதமிஞ்சிக் கிடந்தன அவரிடத்தில்.

அவருடைய பட்டாளமிருந்தது பர்மா போர் முனையில். நள்ளிரவில் ஒரு சமயம் புறப்பட்டார் நமது வீரர், தோழர்கள் சிலருடன். காடும் மலையும் அவர் கால்களை என்ன செய்யும்? அவர் கால்கள் தான் இரும்பாயிற்றே! நடையின் வேகத்திலும், மனத்தின் கொந்தளிப்பிலும் நலத்தோடு திரும்பிக் கூடாரம் வர வேண்டு மென்பதையும் மறந்து விட்டார்கள் அவரும் அவருடைய தோழர்களும்! கன தூரம் நடந்து எதிரியின் எல்லையையே தொட்டுவிட்டார்கள்! ஏராளமான ஜப்பானியர் கண்ணுக்குப் புலனாயினர். பாதுகாவலுக்குள்ளிருந்ததாக எண்ணியதால் அவர்கள் வட்டமிட்டு உட்கார்ந்து வம்பளந்து கொண்டிருந்தனர். தங்கள் தங்கள் உடலை நரிகளுக்கோ, கழுகுகளுக்கோ பங்கிட்டுக்கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டதென எண்ணினர் சொக்கலிங்கமும் அவருடைய தோழர்களும். ஜப்பானியர்கள் கையிலகப்பட்டு விட்டால் ஈவிரக்கத்தை எதிர் பார்ப்ப தெப்படி? பொழுதோ புலரப் போகிறது. காவல் சுற்றிகள் கண்டு விடுவது நிச்சயம். என்ன செய்வது? அவர்களுடைய மனம் பதை பதைத்தது. ஆனால் இப்பொழுது தான் நமது வீரர் சொக்கலிங்கத்திற்குப் பட்டது ஒரு அற்புதமான எண்ணம். "எப்படியும் சாகத் தான் போகிறோம். சாமார்த்தியத்தைக் காட்டிவிட்டுச் செத்தால் என்ன? கோழையாகச் செத்தால்

கொண்டுபோவதென்ன? வீரனைச் செத்தால் வாரிக் கொண்டு போகலாம் புகழை! ஜப்பானியர் கையில் விழுந்து கண்ணியமற்றுச் சாவதற்குப் பதிலாக அவர்களில் சிலரை மாய்த்துவிட்டு வெற்றி மாலையோடு விண் புகலாமே!" என்று தோன்றிற்று நமது வீரருக்கு. தான் சொல்லியபடிச் செய்யவேண்டுமென்றார் தோழர்களிடம்; சரி யென்றார்கள் அவர்களும். "நமது எண்ணிக்கைக்கு மேல் ஐம்பது அறுபது பாகமாவது இருப்பார்கள் எதிரிகள். இருந்தாலும் தைரியத்தைக் கைவிடக் கூடாது" என்றார் சொக்கலிங்க கவுண்டர். "ஆம்" என்றார்கள் தோழர்களும்.

அடுத்த நிமிஷத்தில் மரங்களிலும் புதர்களிலும் மறைந்தார்கள் நம் வீரர்கள். "சுடு என்று உத்தரவிட்டார் நம் சொக்கலிங்கம். சரமாரியாய்ப் பொழிந்தன குண்டுகள். எதிர் பார்க்க வில்லை எதிரிகள் இத் தாக்குதலை. பிணமாய் விழுந்தனர் சிலர்; பிழைத்தால் போதுமென்று ஓடிவிட்டனர் பலர். பெரிய படை யொன்று வந்து விட்டதாகப் பீதி கொண்டனர் ஜப்பானியர். பதினைந்து நிமிஷத்தில் இடமே காலி! சிங்கக் குட்டியைப் போல் பாய்ந்தார் நமது வீரர் சொக்கலிங்கம் ஜப்பானியரிருந்த இடத்திற்கு. வீரம் பெறாத வெகுமதியுமுண்டோ? தனியாக விடப்பட்ட ஜப்பானியத் தலைவன் பதுங்கிப் பதுங்கி ஓடுகிறான். கண்ணில் பட்ட பின்னை அவனைக் கடக்க விடுவாரா நமது சொக்கலிங்கம்? விரைந்தோடிப் பிடித்துக் கொண்டார். கொஞ்சம் குஸ்தி நடந்தது. சிறிது நேரத்தில் ஜப்பானியத் தலைவன் கீழே; நமது வீரர் அவன் மாரின் மேலே. மற்றவர்களும் வந்தார்கள். கைது செய்து கொண்டார்களவனை. உயிருக்கே வந்தது ஆபத்து; சொக்கலிங்கத்தின் வீரமும் தீரமும் அதை வெற்றியாக மாற்றிக் கொடுத்து விட்டது! திரும்பினர் கூடாரத்திற்கு. கேட்கவா வேண்டும் நண்பர்களின் குதூகலத்திற்கு. சொக்கலிங்கத்தைச் சுற்றிக் கூத்தடித்தார்கள் அன்றெல்லாம். ஜப்பானியத் தலைவன் மேலதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப் பட்டான். அதிகாரிகளின் பாராட்டுதலும் அவுல்தார் பட்டமும் சொக்கலிங்கத்திற்குக் கிடைத்ததில் நமக்கு வியப்பில்லை. விஷயங்களெல்லாம் வீட்டிற்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டன. எல்லோருக்கும் பெருமகிழ்ச்சி.

விடு முறை கிடைத்தது சொக்கலிங்கத்திற்கு. புலிகிடந்தான்பட்டிக்குத் தாய் தகப்பன் மற்றுமுள்ள உறவினரைப் பார்க்க வந்தார். எல்லோரும் கட்டுக் கடங்காத மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரித்தார்கள். ஊரில் ஒரு தேவனாக விளங்கினார்.

வேலாயுத கவுண்டரிடத்தில் என்ன இப்படிப்பட்ட மாறுதல் ஏற்பட்டு விட்டது? **தானாக மாரிமுத்து கவுண்டர் வீட்டிற்குப் போய் 'மிலிடேரி சொக்கனை' வரவேற்றார்.** தன் வீட்டிற்கு விருந்திற் கழைத்தார். காரியமில்லாமல் அவர் அப்படி நடந்து கொள்ளவில்லை. இப்பொழுது தன் இளைய பெண் மாணிக்கத்தைச் சொக்கலிங்கத்துக்குக் கொடுத்து விட விருப்பம். அன்று மாரிமுத்து கவுண்டர் தேடிவந்த சம்பந்தத்தை உதறித் தள்ளி விட்டார்; இன்று அதை அவராகத் தேடி ஓடுகிறார். "பெரிய பெண்ணுக்குத் தான் சொக்கலிங்கத்தை கட்டிக்கொள்ள பாக்கிய மில்லாமல் போய் விட்டது. இப்பொழுது மாணிக்கமாவது அந்தப் பாக்கியத்தை யடையட்டும். நகையோ, பணமோ, எவ்வளவு வேண்டுமானாலும் நான் கொடுக்க அஞ்சவில்லை. பழைய சங்கதிகளை மறந்து விட்டு நம் உறவைப் புதுப்பித்துக் கொண்டால் நல்லது," என்று சொல்லி யனுப்பினார். மாரிமுத்துக் கவுண்டரும் நமது சொக்கலிங்கக் கவுண்டரும் வீண் பெருமையும் குறுகிய புத்தியுமுடையவர்களல்ல. ஆனால் சொக்கலிங்கம் ஒரே ஒரு நிபந்தனை மட்டும் கேட்டார். பெண்ணைப் பார்த்துப் பேசிய பிறகு தான் கல்யாணத்திற்கு வார்த்தை கொடுக்க முடியுமென்று சொன்னார். பழைய சொக்கலிங்கமானால் அப்படிச் சொல்லியிருக்கமாட்டார்; நாடுகள் பல சுற்றி எத்தனை விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார் இப்பொழுது? அதற்கும் உடன் பட்டார் வேலாயுதக் கவுண்டர்; எப்படியாவது சொக்கலிங்கம் ஒப்புக் கொண்டால் போதுமென்று தான்.

சொக்கலிங்கக் கவுண்டர் வேலாயுதக் கவுண்டர் வீட்டிற்குப் பெண்ணைப் பார்க்கப் போனார். பெண்ணை நன்றாக அலங்கரித்து அவர் முன்னால் அனுப்பினார்கள். நாணிக் கோணி கொஞ்ச தூரத்தில் வந்து நின்றது அந்தப் பெண். சொக்கலிங்கக் கவுண்டர், "என்ன குப்பம்மா! என்னை மறந்து விட்டு வேறொருவரைக் கல்யாணம் செய்து கொண்டாய். போனால் **போகிறது மாணிக்கத்தைக் கூட்டிக்** கொண்டு வா பார்க்கலாம்," என்றார். அந்தப் பெண்ணுக்குச் சிரிப்பு வந்து விட்டது, சிரிப்பை அடக்கிக் கொண்டு "நான் தான் மாணிக்கம், இன்னும் எந்த மாணிக்கத்தைக் கூட்டிக் கொண்டு வருவது." என்று பதில் சொல்லிற்று. சொக்கலிங்க கவுண்டருக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. அவர் ஊரை விட்டுப் போகிற காலத்தில் மாணிக்கம் சிறு பெண்; இப்பொழுது வளர்ந்து பருவமடைந்து விட்டாள். பார்த்தால் அவள் அக்காளைப் போலவே யிருக்கிறாள். சொக்கக் கவுண்டர் தன் சிரிப்பை அடக்கிக் கொண்டு, மாணிக்கத்தைப் பார்த்தார். மாணிக்கம் அவர் தன்னைப் பார்ப்பது தெரியாமல் தானும் அவரைப் பார்த்தாள். அடுத்த வினாடி பார்வையைக் கீழே நிலத்தில் செலுத்திக் கொண்டு புன்சிரிப்பி லாழ்ந்தாள். "கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதந் தானே?" என்று தட்டித் தடுமாறிக் கேட்டார் சொக்கலிங்கம். "எல்லாம் அப்பாவின் பிரியம்" என்றாள் மாணிக்கம்.

அடுத்த முகூர்த்தத்தில் சொக்கலிங்கக் கவுண்டருக்கும் மாணிக்கத்திற்கும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. ஊரில் உள்ளவர்கள் கண்டும் உண்டும் மகிழ்ந்தார்கள்; பல காலம் வாழவேண்டுமென்று வாழ்த்தினார்கள் தம்பதிகளை.

விடு முறை முடிந்து சொக்கலிங்கம் முன்னணிக்குத் திரும்பும் நாள் வந்தது. மாணிக்கம் முதலில் கொஞ்சம் கவலைப் பட்டாள். பிறகு மனதைத் தேற்றிக் கொண்டு "சென்று வெற்றியோடு திரும்புங்கள். உலக சமாதானத்திற்காக என் மனச் சமாதானத்தைச் சிறிது காலம் பலி கொடுக்கிறேன்" என்றாள். மட்டற்ற மகிழ்ச்சியோடு புறப்பட்டார் நமது வீரர் போர் முனைக்கு.

சென்னை வீரர்களுக்குப் படைத்தலைவர் பாராட்டு

புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் சென்னைப் படைக்கு இந்திய பிரதம படைத்தலைவர் **ஜெனரல் ஆக்கின்லெக்** கீழ்க்கண்ட வாழ்த்துச் செய்தியை யனுப்பி யிருக்கிறார்:—

"சென்னை இராணுவத்தின் இந்தப் படை யமைந்துவிட்டதென்று தெரிந்து பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன். மற்றப் படைகளோடு அடுத்திருந்து இதுவும் போராடும். இந்தியப் படைகளில் மிகப் பழமையானதான இது, பல வீ ச் செயல்கள் புரிந்திருக்கிறது. விசுவாசத்தோடு நெடுங்காலம் சேவை செய்திருக்கிறது. இந்தப் படை மீண்டும் இப்போது அமைந்து பர்மா போர் முனையில் போராடப் போகிறது. 200 வருஷங்களுக்கு முன்பு எப்படி இப்படையினர் சிறந்த முறையில் போராடிப் புகழ் பெற்றனரோ, அப்படியே இப்போதும் புகழ் பெறுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதற்கு வெற்றி வாழ்வு ஓங்குக!"

காரியத்தை முடிக்கிறார்கள்

நாடகம் ஸ்வாரஸ்யமாக நடந்து கொண்டிருக்கிறது. திடீரென்று விளக்குகள் எல்லாம் அணைகின்றன. கொட்டகையில் ஏகக் கூச்சல் உண்டாகிறது. ஸ்திரீகளும், குழந்தைகளும் பீதி கொள்ளுகிறார்கள். ஆனால் டார்ச் லைட்டுகளை அந்த வேளையில் உபயோகப்படுத்தக் கூடாது என்று கொட்டகைக்காரர்கள் கத்துகிறார்கள். எல்லாம் சிறிது நேரம் தான். மெல்ல மெல்ல அரங்க மேடையில் வெளிச்சம் தோன்ற ஆரம்பிக்கிறது. அங்கே ஒரு அற்புதமான காட்சியைக் காண்கிறோம். அதற்க பால் ஆட்டமும், பாட்டும் அமர்க்களமாக நடக்கின்றன. 'ஓ! இம்மாதிரியான மாறுதலைச் செய்வதற்காகத் தான் விளக்கை அணைத்தார்களா, சரி, சரி!' என்று முன்பு பயந்தவர்கள் எல்லாம் நினைக்கிறார்கள்.

இன்பத்திற்கு அறிகுறிகள்.

இதே போலத்தான், நிம்மதியாக இருந்த இவ்வுலக அரங்கிலே, திடீரென்று யுத்தம் எனும் இருள் தோன்றிற்று. அநேகர் பீதி கொண்டனர். ஆனால், நேச தேசத்தவர், எல்லோருக்கும் ஆதரவான மொழிகளைக் கூறிக் கொண்டிருந்தார்கள். நடுவிலே யாரும் கண்ட கண்டபடி பேசி, காரியத்தைக் கெடுக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டார்கள். ஆனால், இப்பொழுது தான் மெல்ல மெல்ல வெளிச்சம் தோன்றத் தொடங்கி யிருக்கிறது. வெகு சீக்கிரமே இருள் எல்லாம் நீங்கும். இந்த உலக அரங்கிலே அப்பொழுது பிரமாதமான மாறுதல்கள் தோன்றும். அது எல்லோருக்கும் இன்பந்தரக் கூடியதாகவே இருக்கும். அந்த இன்பம் வெகு சீக்கிரத்திலேயே லபிக்கப்போகிற தென்பதற்கான அறிகுறிகள் எல்லாத் திசைகளிலும் எழுகின்றன.

சாலையிலே, நேர்குறுக்காக ஒரு பெரிய மதில் போல் ஏதோ ஒன்று தடையாக நிற்பது போல் தெரிகிறது ஆனால், அதை அணுகியதும், அது மூடுபனியென்பது தெரிகிறது. அதுவும் சீக்கிரமே கலைந்து போகிறது என்றால் எவ்வளவு சந்தோஷமாகவும், ஆச்சரியமாகவும் இருக்கும்? அது மாதியேதான், ஐரோப்பாவிலே சில காரியங்கள் நடந்திருக்கின்றன.

'ஒரு பயல், பிரஞ்சுக் கரையில் வந்து இறங்க முடியாது. எந்த பயல் ஜெர்மனி மீது பறந்து வருகிறான் பார்ப்போம்? ஜெர்மனியின் விமான பலத்திற்கும், ஆள் பலத்திற்கும் டானவை எந்த தேசத்திலிருக்கிறது? ஜெர்மனியின நீர் மூழ்கிகளுக்கு எவனால் பதில் சொல்ல முடியும்? ஜெர்மன் எல்லையை எவன் கடக்க முடியும்?' என்றெல்லாம், ஏகத் திமிரோடு, ஜெர்மன் பிரசாரகர்களும், ஜெர்மன் தலைவர்களும், ஹிட்லரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதோடு, யுத்தம் ஆரம்பமாகி, ஓரிரண்டு வருடங்களுக்கு, ஜெர்மனி பிரமாண்டமான வெற்றிகளைச் சம்பாதித்து விட்டது. இவற்றைப் பார்த்ததும், ஜெர்மானியரின் ஆடம்பரப் பேச்சுகளில் உலகோரில் பெரும்பாலோருக்கு ஒரு நம்பிக்கையும், இந்த யுத்தத்தின் முடிவைப்பற்றிய பீதியும் ஏற்பட்டன. ஜெர்மனியையும் ஜெயிக்க முடியுமா? ஹிட்லரின் கொட்டத்தை ஒடுக்க முடியுமா? என்ற சந்தேகங்கள் வலுத்தன.

ஆனால், சென்ற ஒரு வருஷத்திற்குள் நேச தேசத்தார் சாதித்த காரியங்கள் சில, ஜெர்மானியரின் பேச்செல்லாம் வெறும் உருட்டல்கள்தான்; அவர்கள் செய்ததெல்லாம் சுத்த மிரட்டல்கள் தான்; பல தேசங்கள் ஒன்றுகூடும் பொழுது, ஜெர்மனியில்லை, அதன் தாத்தாகூட ஒன்றும் செய்து கொள்ள முடியாது என்பதை ரூபித்து விட்டன.

வெகு காலமாக எதிர்பார்த்த இரண்டாவது போர் முனை மட்டுமின்றி, மூன்றாவது போர் முனையும் தோன்றிவிட்டது ஜெர்மானியரின் உண்மை பலத்தை இவை சோதித்து விட்டன. இத்தகைய சோதனைகள் வரும் என்று ஹிட்லரோ, அவருக்கு உபதேசங்கள் செய்து வந்த 'லோட்டா'க்களோ சிறிதும் எண்ணியிருக்கவே மாட்டார்கள். ஆயினும், அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லிவிட முடியாது. பிரமாதமான பாதுகாப்பு ஏற்பாடுகளை, கடற்கரை ஓரமாக எல்லாம் செய்து வைத்தார்கள். அது தவிர, அவர்களுக்குத் தூங்குவதற்கு யார் அவகாசம் கொடுத்தார்கள்? ஐயா, தூங்கத்தான் அவ்காசம் கொடுக்காமல் அங்குமிங்கும் கடும் போர்களில் அவர்களை நேச தேசத்தார் ஈடுபட மட்டும் செய்து கொண்டிருந்தார்களா, புதிதாக பலவற்றை சிருஷ்டிக்க இடம் கொடுத்தார்களா என்று கேட்டால், அதுவும் இடையாது. போர் முனைகளில் மட்டுமின்றி, போருக்கான பொருள்களைச் சிருஷ்டிக்கும் தொழிற்சாலைகளை தயாதாட்சண்யமின்றி தவிடு பொடி யாக்கிக் கொண்டிருந்தார்கள். ஆகவே, தொழிற்சாலைகளை ரிப்பேர் செய்வதிலேயே பெரும்பாலான ஆட்களும், நேரமும் செலவாகிக் கொண்டிருந்தது. புதிதாகப் போர் முனைக்கு ஆட்களையும், யுத்த சாதனங்களையும் அனுப்பிக் கொண்டிராவிட்டால், அங்குள்ளவர்கள் எல்லாம் மந்திரத்தால் எல்லாவற்றையும் சிருஷ்டித்துக் கொண்டு, போரைத் தொடர்ந்து நடத்த முடியுமா என்ன?

முடியாது என்பது இப்பொழுது நிரூபணமாகி விட்டது. வர வர ஜெர்மானியரின் எதிர்ப்பு ரொம்ப மட்டமாகி வருகிறது. ஒரு இடத்தில் நின்று போராடுகிறார்கள். அந்த இடத்திலே நேச தேசத்தார் ஒரு பிளவை உண்டு பண்ணி விட்டால், அப்புறம் நாஜிகள் நாற்கால் பாய்ச்சலில் ஓடும் குதிரைகள் போல ஓடத் தொடங்கி விடுகிறார்கள். அதற்கப்பால் அவர்களை நேச தேசத்தவர் நொறுக்கித் தள்ளிக்கொண்டே தொடர்ந்தோட நேரிடுகிறது.

சீ! ஆனாலும் இது ரொம்ப மோசம் தான்! நம்மவர்களுக்கு இதிலே எவ்வளவு கஷ்டம் இருக்கிறது தெரியுமோ? முன்னணியில் உள்ள நமது படைகளை திடீரென்று நாலு நாட்களில் நூறு மைல் தூரம் முன்னேறிச் செல்லும்படியாக நாஜிகள் செய்துவிட்டால், அப்புறம் நம்மவர்களுக்கு அப்படைக்கான உதவிகளை எடுத்துச் செல்ல, போதிய அவகாசமிருக்க வேண்டுமா? 'ஆனந்தத்தைத் தானே ஐயா உங்களுக்கு உண்டாக்குகிறோம்?' என்று ஜெர்மன் வீரர்கள் கேட்கலாம். உண்டாக்கட்டும். நம்மவர்களும் ஆனந்தப் படத் தயார். ஆயினும் அந்த ஆனந்தத்திற்கு ஒரு அளவு வேண்டாமா? வேறு வழியிலே இனி நாஜிகள் நேச தேசத்தவர்களை அதிகம் கஷ்டப்படுத்த முடியாது. இம்மாதிரியாக ஏகப்பட்ட சந்தோஷத்தை ஏககாலத்தில் கொடுத்துத் தான் கஷ்டப் படுத்தவேண்டும். அது வன்றி, திடீரென்று யுத்தம் நின்றுபோகும்படி அவர்கள் செய்து விடலாம். அவ்வாறு அவர்கள் செய்தாலும் நேசதேசத்தவர்களுக்கு பல சங்கடங்கள் நேரிடலாம். யுத்தத்திற்குப் பின் ஏதேதோ செய்ய வேண்டுமென உலகெங்கும் பல நாடுகளில் பல திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அவற்றை திடீரென்று அமுல் படுத்துவது என்றால் சிரமமல்லவா?

போகட்டும்! இத்தகைய கஷ்டங்களை நேச தேச மக்கள் அனுபவிக்கத் தயார். யுத்தம் மட்டும் சீக்கிரம் முடிந்தால் போதும் என்று தான் எல்லோரும் சொல்லுவார்கள்.

யுத்தம் சீக்கிரமே முடியக் கூடும் என்று சொல்ல, கொஞ்சம் தைரியம் வருகிறது இப்பொழுது. சென்ற வாரத்தில் பிரான்ஸிலே என்ன நடந்திருக்கிறது பார்த்தீர்களா? பலாய்ஸ் என்ற இடத்திலே பெரிய தொரு நாஜிப் படை மாட்டிக் கொண்டதல்லவா? அதை இரு புறங்களிலிருந்தும், நேசப் படைகள் நெருக்கிக் கொண்டே வந்தன. நாஜிகள் அரும்பாடுபட்டு அதிலே பெரும் பகுதியை மீட்டுக் கொண்டார்கள். சுமார் இருபத்தையாயிரம் பேர்கள் அங்கு மட்டும் கைதியாகி விட்டார்கள்.

கைதிகள் என்றதும் நார்மண்டியிலே மட்டும் ஜெர்மானியருக்கு ஏற்பட்ட நஷ்டக் கணக்கு நினைவிற்கு வருகிறது. அங்கு மட்டும் எண்பது நாட்களுக்குள்ளாக நான்கு லக்ஷம் ஜெர்மானியர் இறந்தோ, காயம்பட்டோ, கைதிகளாகவோ போயிருக்கிறார்கள் என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். ஆள் சேதம் இவ்வளவு என்றால், அதற்கேற்ற ஆயுத, மோட்டார், வெடிகுண்டு நஷ்டங்கள் எவ்வளவிருக்கும் என்று கணக்கிட்டுக் கொள்ளுங்கள். ஜெர்மானியருக்கு நார்மண்டியில் ஏற்

பட்ட தோல்வியும், அங்கிருந்து அவர்கள் அலங்கோலமாக மத்திய பிரான்ஸிற்கு ஓடிப்பதும், ஹிட்லருடைய மனசை அப்படியே பிளந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

பாரிஸ் நகரை அடையு முன் எங்காவது நாஸிகள் நிலைத்து நின்று போராடுவார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், அத்தகைய எதிர்ப்பு எதும் காணோம். பாரிஸ் நகரை பாதுகாப்பற்ற நகரமென நாஸிகள் அறிவித்து விட்டு கண்ணீர் வடித்த வண்ணம் கம்பி நீட்டி விட்டார்கள். அதுவும் நன்மைக்கே! முன்பு நாஸிகள் பாரிஸை கௌவ வந்த பொழுது, பிரஞ்சுக்காரர்கள் அதை பாதுகாப்பற்ற நகரமாக்கினார்களா அல்லவா? அதே போல் நாஸிகள் இப்பொழுது செய்திருக்கிறார்கள். பாரிஸ் அழிந்தால், அதைப் போன்ற தொரு சுந்தர நகரை மீண்டும் சிருஷ்டிக்கவே முடியாது தான். விலைமதிப்பற்ற பொக்கிஷங்களும், அரிய வேலைப்பாடுகள் நிறைந்த பண்டையக் கட்டிடங்களும், சோலைகளும், உய்யானவனங்களும் பாரிஸிலிருக்கின்றன. பாதுகாத்தும் தான் பயனிருக்கப் போகிறதா என்ன? இந்த உண்மையாவது நாஸிகளுக்குத் தெரிந்ததே! அது வரை க்ஷேமந்தான்!

பிரான்ஸிலிருந்து, உருப்படாத விஸி சர்க்கார் ஜெர்மனிக்கு ஓடி யிருக்கிறதாம். இனி அது எப்படி பிரான்ஸிலிருக்க முடியும்? அது அங்கிருந்து ஆளுவதற்கு அதற்கு என்ன இருக்கிறது? பிரஞ்சு மக்கள் தான் அன்றும், இன்றும் என்றுமே சுதந்திரப் பிரியர்களாச்சே! தக்க சமயம் பார்த்து தடி எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவார்களே!

பாருங்களேன், பாரிஸ் எல்லையில் நேசப் படைகள் என்ற செய்தி கேட்டதும், அந்நகரில் உள்ள போலீஸ் படை வேலை செய்ய மறுத்திருக்கிறது. ஊரார் பலர் ஆயுதங்களேந்தி புரட்சி செய்யத் தொடங்கி விட்டார்கள். தங்களது எதிரிகளோடு நாஸிகள் போராடுவார்களா, தங்களுக்கு மத்தியிலேயே உள்ள அவஸ்தைகளைச் சமாளிப்பார்களா? கஷ்டம் தான!

இதோடு, தென் பிரான்ஸிலே போய் இறங்கிய நேசப்படைகள் வெகு ஜோராக உள் நாட்டிலே முன்னேறிக்கொண்டிருக்கின்றன. சென்ற பத்து நாட்களில், அப்படைகள் கடற் கரையிலிருந்து சுமார் முப்பது மைல்கள் சென்றிருக்கின்றன. ஜெர்மானியருக்கு ரொம்ப உதவியாக இருந்த சில மத்தியதரைக் கடல் பிரதேச துறைமுகங்களை நேசப்படைகள் பிடித்து விட்டன. ஜெர்மானியரின் எதிர்ப்பு பிரமாதமாக இல்லை என்றே செய்திகள் கூறுகின்றன. இங்குள்ள படைகளுக்கும் நார்மண்டியில் உள்ள படைகளுக்கும் இடையே முந்நூறு மைல்கள் தானிருக்கின்றனவாம். இப்பொழுது செல்லும் வேகத்திலேயே அமெரிக்கர்கள் போவார்களானால் இன்னும் பதினைந்து, இருபது நாட்களில் நார்மண்டியில் உள்ள படைகளுக்கும், தென் பிரான்ஸிலிருந்து செல்லும் படைகளுக்கும் தொடர்பு எற்பட்டுவிடலாம். அப்புறம் மாம்பழத்திலே ஒரு பகுதியை நறுக்கி எடுத்து வாயில் போடுவது போல், பிரான்ஸிலே ஒரு பெரும் பகுதியை நம்மவர்கள் கிள்ளி எடுத்து, எடுத்து, தங்கள் பாதுகாப்பிற்குள் வைத்துக் கொண்டு விடுவார்கள்.

இந்த வார உலக



நேசப் படைகளுடன் சுதந்திர பிரஞ்சுப் படைகளும் சேர்ந்து போராடுகின்றனவாம். அது தவிர, உள் நாட்டு மக்களில் பலர் ஆங்காங்கே தங்கள் ஸ்வரூபத்தைக் காட்டி, ஆங்காங்கே உள்ள ஜெர்மானியரை 'அரோஹரா!' செய்து வருகிறார்கள். ஆகவே, தென் பிரான்ஸிலிருந்து முன்னேறும் படைகளின் வேலை சுலபமாகி விடுகிறது.

இம்மாதிரி வேலைகள் சுலபமாகிக் கொண்டே யிருப்பதைப் பார்த்தால், யுத்தத்தின் முடிவு சமீபத்திலேயே இருக்கும் என்று சொல்லத் தோன்றுகிறதா இல்லையா? சீக்கிரமே ஜெர்மானியர் பிரான்ஸையே காலி செய்து விட்டு ஓடிவிடுவார்கள் போலிருக்கிறது. இல்லாவிட்டால், ஜெர்மன் பிரசாரகர்கள், 'பிரஞ்சு நகரங்களையும் பிரஞ்சு மக்களையும் பற்றி நமக்குக் கவலை இல்லை!' என்று சும்மா சொல்லுவார்களா?

அவர்கள் இவ்வாறு சொல்லுகையில், நேசப் படைத்தலைவரான ஜெனரல் மண்ட்கமரி என்ன சொல்லுகிறார் கேளுங்கள் 'நல்ல நல்ல வெற்றிகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ரொம்ப ஜோராகத் தானிருக்கிறது யுத்தத்தின் போக்கு. சீக்கிரமே காரியத்தை முடித்துக் கொண்டு, நமது வேலையைக் கவனிக்கலாம்' என்கிறார் அவர். ஏதோ

யுத்தச் செய்திகள்



பகுதிகளிலிருந்து ஜப்பானியர்களை விரட்டுவதற்கு, பர்மாவிலுள்ள விமான தளங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இங்கே இன்னும் நாம் வெகுவாகப் போராட வேண்டியிருக்கிறது. என்றாலும் நமது கைதான் இங்கே ஓங்கி நிற்கிறது. காட்டுப் போராட்டத்தில் நாம் கெட்டிக்காரர்களாகி விட்டோம்.

யுத்தக் கொடுமையை ஜப்பான் உணருகிறது.

ஜப்பான் தோல்வியடைந்து விட்டதென்று இப்போது சொல்லுவதற்கில்லை. என்றாலும் கடைசி அடியும் அடித்தாயிற்று. மேற்கே ஐரோப்பாவில் நடைபெறும் யுத்தம் உச்ச நிலையை யடைந்து கொண்டிருக்கிறது. ஜப்பானியர் தம் ஆதிக்கத்தைத் தக்கபடி செலுத்த முடியாமல், வயப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கும் பல வீனமான பகுதிகளில், நேசப் படைகள் தாக்குகின்றன. மேற்கே ஜெர்மன் பலம் குன்றுவது போலவே, கிழக்கேயும் ஜப்பானின் பலம் குறைவது கவனிக்கத் தக்கது. ஹல்மேஹரா தீவினின்று பிலிப்பைன் தீவுகளை ஜெனரல் மெக்கார்தருடைய வீரப் படைகள் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள துறை முகங்களில் ஜப்பானியக் கப்பல்கள் பந்தோபஸ்தாக இருக்க முடியாதபடி வெடி குண்டுகளைக் கொண்டு நேசப் படைகள் தாக்கின. சீனாவிலுள்ள நேச நாட்டுத் தளங்களிலிருந்து பற்றொரு போர்த் தந்திர முறை கையாளப்படுகிறது. கயிச்சு தீவிலுள்ள வக்கமா நகரத்தின் மீதும், நாகசாக்கிப் பட்டினத்தின் மீதும் அமெரிக்கக் கோட்டை விமானங்கள் வெடி குண்டுகளை வீசினர். அதனால் ஜப்பானியருக்குப் பெருஞ் சேதம் விளைந்தது. சமீபத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தன் நாட்டினருக்கு ஒரு கட்டளை யிட்டிருக்கின்றார். அதன்படி பெரிய கோட்டை விமானங்களும் நெடுந் தூரம் பறந்து செல்லக் கூடிய வெடி குண்டு விமானங்களும் ஏராளமாகக் கட்டப்படும். இச் செய்தி ஜப்பானியர் வயிற்றில் புளியைக் கரைத்து விட்டிருக்கும் என்பது பற்றி சந்தேகமே கிடையாது. தற்போதுள்ள ஆபத்தான நிலையைக் குறித்து விளக்கி ஜப்பானியப் பொது மக்களுக்குக் கூற வேண்டிய அவசியம் ஜப்பானிய அரசாங்கத்திற்கு ஏற்பட்டு விட்டது. ஏனென்றால் ஜப்பானியப் போக்கு வரவுகள் தடைப்பட்டுப் போனபடியால் சப்ளைகள் வந்து சேர முடியாமல் ஜப்பானியர்கள் தவிக்கிறார்கள். ஜெர்மன் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையைவிடக் கடுமையானதோர் நிலைமையை, ஜப்பானியர்கள் அனுபவிக்கப் போகிறார்கள்.

புல் நிறைய வளர்ந்த தோட்டத்தைச் சுத்தப்படுத்துவதுபோல் தானிருக்கிறது நேசதேசத்தார் பிரான்ஸில் செய்யும் வேலை. ஜெர்மன் பிரசாரமெல்லாம் சுத்த கப்ஸா என்பது வெளியாகிவிட்டது. ஜெர்மனி நொறுங்கப் போகிறதென்பதும் ஊர்ஜிதமாகிவிட்டது. ருஷ்யர்கள் தான் ருமேனியாவையும், கிழக்கு பிரஷ்யாவையும், போலந்திலும் பிரமாதமாகத் தாக்கி வருகிறார்களே! சென்ற 38 மாதங்களில் ஜெர்மனி, ருஷ்யப் போரில் ஐம்பதாயிரம் விமானங்களையும், இரண்டு லக்ஷம் மோட்டார் வண்டிகளையும் இழந்திருக்கிறது. ஐயோ! அத்தனை வண்டிகளும் பஸ்களும் நம் ஊர்களில் ஓடினால், இடிபடாமல் போகலாமே என்று தோன்றுகிறதல்லவா? சண்டை முடியட்டும், அந்த சுகமெல்லாம் அநுபவிக்கலாம். இப்பொழுது, எடுத்த காரியத்தை, யுத்த காரியத்தை சீக்கிரமே முடிக்கலாம்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜப்பானியர்கள் புழுக்களையும் காட்டுத் தட்டைகளையும் தின்று ஜீவிக்கிறவர்கள். நமது விமானப் படையின் உதவியால் நம் படைகளுக்கு வேண்டிய அளவு உணவு சப்ளை செய்யப்படுகிறது. உலகப் போராட்டத்தில், ஒரு மாற்ற முண்டு பண்ணும் முக்கியமான கட்டம் இது தான். ஜப்பானியர் வயப்பட்டுள்ள தெற்கு பர்மாவிலும் நேச விமானப் படைகள் தாக்கிக் கொண்டிருக்கின்றன. மிட்சினா-மாண்டலே ரயில்வே லைனின் ஒரு கோடி நம் வசமிருக்கிறது. டிட்டிம் ரோடு முதலிய

வானொலி நாட் குறிப்புக்கள்.

29—8—44	திருச்சி	மாலை 7-15	—"நாமும் யுத்தமும்"—மிஸ்டர் எஸ். செங்கமலம் பிள்ளை.
29—8—44	சென்னை	ஷ 7-0	—"நடைமுதல் பேச்சு".
30—8—44	திருச்சி	ஷ 7-15	—"ஜப்பானின் புதிய லட்சியங்கள்"—மிஸ்டர் ஜோசப் சின்னப்பா.
30—8—44	சென்னை	ஷ 7-0	—"அச்சுப் பிரசார முரண்கள்".

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஆகஸ்ட்டு 16.—"இந்தப் பறக்கும் குண்டுகள், இனி கையாளப்படக் கூடிய மிகக் கொடிய நாசக் கருவிகளின் முன்னணியா யிருக்கலாம். அந்த நாசக் கருவிகள் ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து எறியப்படலாம்" என்று அமெரிக்க நிதி மந்திரி மிஸ்டர் மார்கெந்தோ குறிப்பிட்டார்.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

ஆகஸ்ட்டு 7.—பசிபிக் மகா சமுத்திரத்தில் 15,000 மைல் தூரம் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு, ஜனாதிபதி ரூஸ்வெல்ட் திரும்பி வந்து சேர்ந்தார்.

ஆகஸ்ட்டு 18.—தாமதமின்றி விரைவில் மிஸ்டர் சர்ச்சிலைக் காணப் போவதாகவும், ஜெர்மனியில் குடியேறுவது பற்றி பிரிட்டனுக்கும், ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கூறினர்.

ஆகஸ்ட்டு 21.—டம்பர்டன் ஓக்ஸில், சர்வதேசப் பாதுகாப்பு மகாநாடு ஆரம்பமானது. மிஸ்டர் கார்டெல் ஹல்லும், சர் அலெக்ஸாந்தர் கடொகனும் அங்கே பேசினர்கள்.

இந்தியா, பர்மா இலங்கை

ஆகஸ்ட்டு 17.—மணிப்பூர் சமஸ்தானத்தி லின்று ஜப்பானியர் அடியோடு விரட்டப்பட்டுவிட்டனர். பர்மா எல்லைப் புரத்திற்கு 2 மைல்களுக்குள்ளாக 14-ம் படைகள் புகுந்து விட்டன.

ஆகஸ்ட்டு 18.—சிட்டாங் பாதையில் தாமிருந்த மறை விடங்களை விட்டு ஜப்பானியர்கள் கிளம்பி விட்டனர்.

ஆகஸ்ட்டு 19.—மோகாங் - மாண்டலே ரயில்வே வழியாக மாண்டலேயை நோக்கி நேசப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

ஆகஸ்ட்டு 21.—14-ம் படை குவெய்வம் என்னுமிடத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ரஷ்யாவும், பின்லாந்தும்

ஆகஸ்ட்டு 16.—சான்டோமீர்ஸ், பைல்வா முதலிய 100 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 17.—கிழக்குப் பிரஷ்ய எல்லை புரத்திற்குள் ரஷ்யப் படைகள் புகுந்து விட்டன. 30 இடங்களைக் கைப்பற்றிக் கொண்டன. வைசு, ரபின் ஆகிய இடங்களையும் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 18.—ஜெர்மன் எல்லைக்குள் போர் நடக்கிறது. தம் சொந்த நாட்டிற்குள்ளாகவே ஜெர்மன் படைகள் மடிகின்றன. அஹியா, வால்கமெட்சி முதலிய 200 இடங்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 19.—வார்சாவில் கைகலந்த போராட்டம் மகா கடுமையா யிருந்தது. அலுக்ஸ்டே முதலிய 100 இடங்களுக்கு மேல் சோவியத் படைகள் கைப்பற்றின.

சென்ற 38 மாதங்களாக நடைபெற்ற யுத்தத்தில், சோவியத் விமானப் படை 50,000 ஜெர்மன் விமானங்களை நாசப்படுத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

ஆகஸ்ட்டு 21.—ருமேனியப் போர் முனையில் ரஷ்யப் படைகள் தாக்கின. சோடோமெனி, ஹெலிஸ்டினி, போட்ஸோக்ளோவெல், ஜாஸஸி, டிகினுவீர் தென்மேற்குப் பகுதியிலும் கடும் போர்கள் நடைபெறுகின்றன. ஜூக்கும்ஸிலிருந்து ரஷ்யப் படைகள் காலியாகின.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஆகஸ்ட்டு 16.—ப்ளாரென்ஸ் நகரத்தை யடுத்தும், அதற்குச் சற்று மேற்கேயும் நேசப் படைகள் ஆர்னோ ஆற்றைக் கடந்தன.

ஆகஸ்ட்டு 18.—ரொசானோவை இந்தியப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஆகஸ்ட்டு 19.—இத்தாலியில் தளம் கொண்டிருக்கும் வெடி குண்டு விமானங்கள் ருமேனியாவிலுள்ள ப்ளோயெஸ்டியைத் தாக்கின.

ஆகஸ்ட்டு 20.—காப்ரியெல்லி, மண்டாபோ, பெர்கோலா ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஆகஸ்ட்டு 21.—மன்டேவியா, செரான்பைன், பாலெர்மோ ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

மிஸ்டர் சர்ச்சில் 5-ம் படையைக் காண விஜயம் செய்தார். விக்டர் இம்மானுவேல் அரசர் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தார்.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வசப்பட்ட நாடுகள்.

ஆகஸ்ட்டு 16.—பிரான்சின் தென் பகுதியில் நேசப் படைகள் வேரூன்றிக் கொண்டன. முக்கியமான இடங்களெல்லாம் கைப்பற்றப்பட்டன. கான்னிஸிலிருந்து போன் வரை 120 மைல்கள் தூரம் நேசப் படைகள் அமைந்திருக்கின்றன. சில இடங்களில் 8 மைல் தூரம் உள் நோக்கி முன்னேறி யிருக்கின்றன. கான்னிஸ், ஹையர்ஸ் விரிகுடாவிலுள்ள போர்ட் க்ராஸ், லிவார்ட் என்னும் தீவுகளையும், கேப் நீகரையடுத்த தீபகற்பத்தையும் நேசப் படைகள் கைப்பற்றின.

செண்ட் மாலோ, டிஞ்செப்ரே. டாம்ப்ரண்ட் ஜெர், லாபோர்ட் ரேஸ், வாசி ஆகிய இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின. பலாய்சின் வெளிப்புரங்களில் நேசப் படைகள் வந்து விட்டன.

நேற்று பிரஞ்சுக் கரையில் நேசப் படைகள் இறங்குவதை மிஸ்டர் சர்ச்சில் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆகஸ்ட்டு 17.—நேசப் படைகள் பாரீசுக்கு 23 மைல் தூரத்தி லிருக்கின்றன். ஓர்லியான்ஸ். சட்ரிஸ், ட்ரு, பலாய்ஸ், டோர்ன, காண்டி முதலிய இடங்களை நம் படைகள் பிடித்தன. தென் பிரான்சில் கடற் கரையில் 500 சதுர மைல் தூரத்திற்கு நேசப் படைகள் விரவி யிருக்கின்றன.

ஆகஸ்ட்டு 18.—நார்மண்டி போராட்டத்தில், ஜெர்மானியர்கள் 4 லட்சம் பேர்கள் கொல்லப்பட்டும், கைதியாகியும், காயப்பட்டும் போயினர். நார்மண்டிப் போராட்டத்தில் நேச நாடுகள் வெற்றி பெற்றன. பாரீசுக்கு 10 மைல் தூரத்திலுள்ள வர்செய்ல்ஸ் அமெரிக்கப் படையினர் வசமானது. வென்டோம், ட்ரன், செட்டாடன், சென்ட் கலே, ஆதன், ப்ரோமென்டல், பாபோ, நோரி, பெசிடான் ஆகியவற்றை நேசப் படையினர் கைப்பற்றினர்.

லா, நபோல், ட்ராக்யுக்ஞன், விடாபன், லாலூஸ், பெஸ்ஸி, ச்யூர்ஸ் முதலிய இடங்களை நேசப்படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 19.—சென்ட் ஜூலியன் லா பாகன் நேசப் படைகள் வசமானது. காபோர்க், டைவெஸ், சுர்மேர், டோல் ஆகியவற்றை நேசப்படைகள் அடுத்துவிட்டன. தென் பிரான்சில் 1,000 சதுர மைல் அளவிற்கு நேசப்படைகள் விரவி யிருக்கின்றன.

லா, ரோக் கிப்ரூசேன், சாலிஸ் பாண்ட், சென்ட் கரியாட், ப்ரிகனோல்ஸ், வின்ஸ், சாலெர்னஸ் ஆகியவை நேசப் படைகள் வசமாயின.

ஆகஸ்ட்டு 20.—சீன் ஆற்றை நேசப் படைகள் கடந்தன. ஜெனரல் டிகால் பிரான்சுக்கு வந்து சேர்ந்தார்.

தென் பிரான்சில் ட்யூரென்ஸ் ஆற்றை நேசப் படைகள் கடந்தன. மேலும் 20 மைல்கள் முன்னேறின. சென்ட் மாக்ஸிமையும், பர்ஜோல்ஸையும் கைப்பற்றிக்கொண்டன.

ஆகஸ்ட்டு 21.—பாரீஸ் நகர எல்லைக்குள் நேசப் படைகள் புகுந்தன. லிவ்ராட், சம்பரய்ஸ் என்னுமிடங்கள் நேசப் படைகளின் வசமாயின.

நார்மண்டி போர்முனைக்கு மிஸ்டர் ஈடன் விஜயம் செய்ததாகத் தெரிகிறது.

வேலையை விரைவில் முடித்துவிடும்படி ஜெனரல் மண்ட்காமரி தன் படைகளுக்கு ஒரு விசேஷச் செய்தி விடுத்தார்.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஆகஸ்ட்டு 16.—ஹல்மஹேரா தாக்கப்பட்டது. வாகெல்கோப், டச் நியுகினி, நியு அயர்லாந்து, நியு பிரிட்டன், போகன் வில்லா ஆகிய தீவுகளின் கடற்கரைகளை நேசக் கப்பற் படைகளும் விமானப் படையும் நிர்த்தூளியாக்கின.

ஆகஸ்ட்டு 18.—ஹல்மஹேரா தீவிற்கு வடகேயுள்ள மிடி வியானக் கூட்டத்திலிருந்த 23 ஜப்பானிய விமானங்களை நேச விமானங்கள் நாசமாக்கின.

ஆகஸ்ட்டு 19.—பேப்க் தீவின் மேல் கரையிலுள்ள வார்டோ என்னுமிடத்தில் நேசப் படைகள் இறங்கின.

ஆகஸ்ட்டு 20.—லோடுங்போ, சீனப் படை வசமானது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.